**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 6 (LW 27)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. பிரியா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | அரசு மருத்துவர் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2024.

( எதிரி ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

1) நான் தற்பொழுது தேனி க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரத்த வங்கியில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2019 ஆம் தேதி மேற்படி மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராக பணிபுரிந்தேன். அப்பொழுது மதியம் 12.20 மணியளவில் ஆண்டிபட்டி காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக்கொண்டு இறந்து போன சென்றாயன், மணி என்ற மணிச்சாமி, 11 வது வயது சிறுமி அபிநயா ஆகியோர் மீது பிணக்கூராய்வு செய்தேன்.

1. சென்றாயன் என்பவருக்கான உடல் கூறு ஆய்வு அறிக்கை அசாஆ 3 ஆகும்.

2. அபிநயா என்பவருக்கான உடல் கூறு ஆய்வு அறிக்கை அசாஆ 4 ஆகும்.

3. மணி என்ற மணிச்சாமி என்பவருக்கான உடல் கூறு ஆய்வு அறிக்கை அசாஆ 5 ஆகும்.

4. சீதாலட்சுமிக்கான உடற்கூறு ஆய்வறிக்கை அசாஆ. 6 ஆகும்.

என்னுடைய உடற்கூறு ஆய்வு பற்றி தெளிவாக உடற்கூறு ஆய்வு பற்றி குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நபர்களுக்கு இறப்பானது அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட பின்விளைவு மற்றும் இரத்த இழப்பு, அதிர்ச்சி ஆகியவற்றால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என கருத்து கூறியிருக்கிறேன். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி:** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.11.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

ஓம்/திரு.எஸ்.கோபிநாதன்
கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
04.11.2024